எனவே அவர்களும் அதற்குரிய பதில்களை வேகமாகப் பெற்றுத் தருகிறார்கள். ஆனால் ஒன்றிரண்டு கேள்விகள் அவருக்கு வந்து பேரவைச் செயலகத்திற்குக் கொடுக்கப்படுவதிலேகூட தாமதம் அதிகாரிகள் மட்டத்திலே நிகழ்ந்துவிடுகிறது என்றுதான் இந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டில் தெரிய வருகிறது. எனவே, இந்த 42 நாள் என்று இல்லாவிட்டாலும், அடுத்த கூட்டத் தொடருக்குள் எப்படியும் எங்களுக்குப் பதில் வந்துவிட்டால், நாள்தோறும் அவர்களுக்கு இரண்டிரண்டு கேள்விகளைக் கொடுத்தது போக, மீதம் இருக்கிற கேள்விகளை உடுக்குறியிடாத வினாக்களாக (unstarred questions) நாங்கள் டேபிளில் வைத்துவிடுவோம். அது இப்படிப்பட்ட தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே எல்லா அமைச்சர்களையும் இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்வது, கேள்விகளுக்கு உரிய கால அளவிற்குள் பதில் தருவதற்கான உரிய ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து தரவேண்டும் என்று அவரவர்களுடைய துறையினர்களுக்கு நீங்கள் அறிவுறுத்த வேண்டும்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 389, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

389—

பெரியார் கால்வாயில் பாலம் கட்டுதல்.

*20536—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மேற்கு பஞ்சாயத்து யூனியனில் மாலைப்பட்டி பஞ்சாயத்துக்கும், பூலாம்பட்டி பஞ்சாயத்துக்கும் இடையில் பெரியார் கால்வாயில் பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 ஏப்ரல் 21]

(அ) பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு பஞ்சாயத்து யூனியனில் மாலைப்பட்டி பஞ்சாயத்துக்கும் பூலாம்பட்டி கிராமத்துக்கும் இடையில் பெரியார் கால்வாயில் பாலம் அமைக்கும் திட்டம் குறித்து அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்பகுதி ஒரு முக்கியமான பகுதியாகும். இப்பகுதியில் இரண்டு போக சாகுபடியாக நெல், கரும்பு போன்றவற்றை சாகுபடி செய்கிறார்கள். பெரியார் கால்வாயின் தென்புறத்தில் இந்த நிலங்கள் இருக்கின்றன. வடபுறத்தில் அந்தச் சாலை இருக்கிறது. நெல், கரும்பு போன்றவற்றை எடுத்துவருவதற்கு ஏறத்தாழ 38 கிலோமீட்டர் சுற்றி வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கரும்பு போன்ற பொருள்களை அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு எடுத்துச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அது மாலைப்பட்டி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதால், அந்தப் பாலத்தை அமைத்தால் ஏழு கிலோ மீட்டர் அருகிலுள்ள அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு எடுத்துச் செல்லலாம். எனவே, அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூலாம்பட்டி மற்றும் மாலைப்பட்டி அருகில் ஏற்கனவே பெரியாறு மெயின் கால்வாயில் 35/180 மற்றும் 37/677-ல் முறையே வாலிடைமருதூர், வெளிச்சநத்தம் கிராமங்கள் அருகில் இரு பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தற்போது சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் காளிராஜன் அவர்கள் கேட்டிருக்கிற பாலம் கிலோ மீட்டர் 35/575-ல் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆகவே, அவர் கேட்கும் பாலம் எல்.எஸ். 35/180-ல் கட்டப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் தன் வேண்டுகோளை 8-1-1993ல் நடைபெற்ற மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மேற்படி கூட்டத் தீர்மானம் 11-ல் பாலம் கட்டுவதற்கு தேவையான ரூபாய் பத்து இலட்சத்தை மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் பொதுப்பணித் துறைக்கு முன்னளிப்பு செய்யவேண்டும் எனவும்,

பொதுப்பணித் துறை மேற்படி பாலத்தை கட்ட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் மேற்படி ஒன்றியம் தன்னிடம் பத்து லட்சம் ரூபாய் முன்னளிப்பு செய்ய நிதி வசதி இல்லையென்று கூறிவிட்டது. இந்த நிலையில் தேவைப்படும் தொகையை அரசு மேற்கு ஒன்றியத்திற்காவது அல்லது பொதுப்பணித் துறைக்காவது அனுமதி அளிக்கும் பட்சத்தில் இந்தப் பாலம் பொதுப்பணித்துறையால் கட்டி முடிக்கப்படும் என்பதை தலைமைப் பொறியாளர் (பாசனம்) விவரம் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் ஒன்றியத்தில்தான் ஏராளமாக பணம் வைத்திருக்கிறீர்களே, கொடுக்க வேண்டியதுதானே? உறுப்பினர் அதற்கு உரிய ஏற்பாடு செய்யலாம். ஏராளமாகப் பணம் வைத்திருக்கிறார்கள்.

வினா எண் 390, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

390—

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கிளைகளுக்கு அதிகாரம் அளித்தல்

*15463—திரு. க. **அர்ச்சுனன்:***

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மாவட்டக் கிளைக்கு ஏற்கெனவே கொடுத்திருந்த அதிகாரத்தை அதன் தலைமை நிர்வாகமே எடுத்துக் கொண்டதை மீண்டும் மாவட்ட கிளைகளுக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மாவட்டக் கிளைக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை தலைமை நிர்வாகம் எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை